இருந்தால்தான் அவர்கள் அந்த எல்லைக்கு அப்பால் இருப்பார்கள், இங்கேயிருப்பவர்கள் அந்த எல்லைக்கு அப்பால் போகாமல் இருப்பார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதற்காக மத்திய அரசே ஒரு சட்டம் கொண்டு வருவதாகவும், அதை உருவாக்கிக் கொண்டிருப்பதாகவும், விரைவிலே அது இயற்றப்படும் என்றும் மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. ஆனால் நிலையாக மத்திய அரசாங்கத்தினுடைய கடற்படையைச் சேர்ந்த ரோந்து சுற்றுகின்ற கப்பல்கள் அந்தப் பகுதிகளில் என்றென்றும் இருக்க வேண்டும், அடிக்கடி தகராறுகள் அந்தப் பகுதியில்தான் வருகின்றன என்று இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துத் தெரிவித்து இருக்கிறது. மத்திய அரசு அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

இராமேஸ்வரம் பகுதியில் மீனவர்களுக்கு குடியிருப்புகள்.

* வினா எண் 183—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் தீவுப் பகுதியாகிய பாம்பன், தங்கச்சி மடம், கரையூர், இராமேஸ்வரம் ஆகிய ஊர்களில் மீனவர்களுக்கு இந்த ஆண்டில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) அப்படியானால் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப் படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் தீவுப் பகுதியாகிய பாம்பன், தங்கச்சிமடம், காரையூர், இராமேஸ்வரம் போன்ற இடங்களிலே பல ஆயிரக் கணக்கான மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் மேம்படாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுடைய மேம்பாட்டிற்காக வேண்டித்தான் இங்கே இருக்கிறோம் என்று பலமுறை நம்முடைய கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமையிலே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது திட்டத்திலே இல்லையென்று சொல்லப்படுகிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்து, வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஊர்களைப் பொறுத்த வரை இல்லை என்றேன். ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தைப்

1981 பிப்ரவரி 5]

பொறுத்தவரையிலே 1168 வீடுகள் கட்டுவதற்கு இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன.

தேவிப்பட்டணத்திலே 104 வீடுகளும், ஏர்வாடியிலே 60 வீடுகளும், நம்புதாளையில் 150 வீடுகளும், தொண்டியில் 150 வீடுகளும், கீழமுண்டலம் என்ற இடத்தில் 50 வீடுகளும், முடி வீரப்பட்டணத்தில் 34 வீடுகளும், காசிப்பட்டணத்தில் 50 வீடுகளும், திருப்பாலைக்குடியில் 250 வீடுகளும், முள்ளி முனையில் 50 வீடுகளும், கண்கொள்ளாப்பட்டணத்தில் 50 வீடுகளும், பாம்பனில் 100 வீடுகளும், வாலிநோக்கத்தில் 120 வீடுகளும், ஆக 1,168 வீடுகள் கட்டுவதற்கு அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. இப்பொழுது 400 வீடுகள் கட்டப்பட்டு விட்டன. 768 வீடுகள் கட்டுமான நிலையில் பல்வேறு நிலையில் இருக்கின்றன. அவைகள் எல்லாம் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பாலைக்குடி, கண்கொள்ளாப்பட்டணம், தேவிப்பட்டணம் போன்ற இடங்களிலே வீடுகள் கட்டப்படுகின்றன என்று சொல் கிறார்கள். எந்த அளவிற்கு திட்டமிடப்பட்டதோ, அந்த அளவு திட்டமிடப்பட்டு வீடுகளைக் கட்டாமல் 40 வீடுகள், 20 வீடுகள்தான் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. வேகமாக நடவடிக்கை எடுத்து, ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி அந்த வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் வேக மாக அரசால் செய்யப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி 400 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன, 640 வீடுகள் முடிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. பல்வேறு நிலைகளில் கூரை வேயப்பட்ட நிலையிலும், உத்திரம் வரை வந்த நிலையிலும், ஜன்னல் வரை வந்த நிலையிலும், தரை வரை வந்த நிலையிலும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டதைப் போன்று விரைவிலே முடிக்க வேண்டுமென்று தான் ஆணையிட்டிருக்கிறோம். அடுத்தடுத்து நாம் ஆண்டுக் கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதன் காரண மாக, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட வீடுகளைக் கட்டி முடிப் பதில் காலம் தாழ்த்தாத அளவுக்குச் செய்ய வேண்டுமென்று நாம் அறிவுறுத்தியிருக்கிறோம். விரைவிலே முடிப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

திரு. த. இராமசாமி : தலைவர் அவர்களே, மீனவர்கள் அதிகமாக வாழ்கின்ற இராமேஸ்வரம், தங்கச்சிமடம், கரை யூர் போன்ற பகுதிகளில் வருகின்ற ஆண்டுகளிலாவது அந்தப் பகுதிகளில் அதிகமான வீடுகளை மீனவர்களுக்குக் கட்டித்தர உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 5

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டுக்கான திட்டங்களை நாம் தீட்டி வருகின்றோம். அடுத்த ஆண்டுத் திட்டத்திலே அந்தப் பகுதி கள் அடங்கியிருக்கின்றனவா, இல்லையா என்பதைப் பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. அடுத்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு மீனளத் துறை எந்த எந்த இடங்களை சிபாரிசு செய்கிறார்கள், எவை எவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

சேரன்மாதேவி துணைக் கருவூலம்.

*வினா எண் 184—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற க. சொர்ணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேரன்மாதேவியில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கரு வூலத்திற்கு எந்தெந்த கிராமங்களை அரசு ஒதுக்கியுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சேரன்மாதேவி வட்டத்தில் பாப்பாக்குடி, முக்கூடல், சேரன்மாதேவி மற்றும் மேலச்செவல் என்ற நான்கு உள்வட்டத்திலுள்ள கிராமங்கள் அடங்கும். சேரன்மாதேவி துணைக் கருவூலம் மேற்கூறிய நான்கு உள்வட்டத்திலுள்ள கிராமங்களில் வாழும் பொது மக்கள் மற்றும் அரசு அலுவலர்களின் தேவைகளைக் கவனித்து வருகிறது.

[முற்பகல் 9—20]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேரன்மாதேவி கருவூலத் திற்கு அனுமதிக்கப்பட்ட அந்த கிராமங்கள், பிர்காக்கள் ஏற் கனவே அம்பாசமுத்திரத்தில் இருந்தது. பக்கத்திலே இருந் ததால் அந்தப் பகுதி மக்களுக்கு நலமாக இருந்தது, அதைப் பிரித்து சேரன்மாதேவி கருவூலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கு நன்றி. ஆனால் அம்பாசமுத்திரத்துக்குப் பக்கத்தில் இருக்கிற சாட்டுப்பத்து, பனஞ்சாடி, பள்ளாக்கால், பொதுக் குடி போன்ற கிராமங்கள் அம்பாசமுத்திரத்திற்கு அப்பால் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேரன்மாதேவி கருவூலத் துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று அம்பாசமுத் திரத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கல் லிடைக்குறிச்சி மற்றும் சில கிராமங்கள் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேரன்மாதேவி கருவூலத்துடன் சேர்க்கப் பட்டிருக்கிறது. அவர்கள் 20 கி. மீட்டர் தூரம் கடந்து செல்லும் நிலை இருக்கிறது. இந்த நிலை தவறாக ஏற்பட்டி ருக்கிறதல்லவா ? அப்படியானால் அந்தத் தவறை நிவர்த்தி